விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

21.08.2020 வெள்ளிக்கிழமை

## யாழ்.பல்கலை மாணவர்களுக்கு அடிப்படை உதவிகள் வேண்டும்

### கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 21

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான அடிப்படை உதவிகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமெனப் பல்கலைக்கழகப் பேரவையிடமும் துணைவேந்தரிடமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம், நேற்று

02

# முதலில் '19' நீக்கப்படும் பின்பே புதிய அரசமைப்பு

## அதற்காகவே எமக்கு மக்கள் ஆணை தந்தனர் சபையில் அறிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய



கொழும்பு, ஓகஸ்ட் 21

"தெளிவான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத, தீவிரவாதத்தின் அழுத்தங்களுக்கு தொடர்ச்சி யாக அடிபணியும், நிலையற்ற பாராளுமன்றம் ஒரு நாட்டுக்கு பொருத்தமானதல்ல. 1978 முதல் 19 முறை திருத்தப்பட்டுள்ள எமது அரசமைப்பில் உள்ள உறுதியற்ற தன்மை, சிக்கல்கள் காரணமாக தற்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அரசமைப்பில் மாற்றத்தைச் செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன் பின்னர் அனைவருடனும் இணைந்து நாட்டுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசமைப்பொன்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்போம்."

04

## பாதசாரிக் கடவையில் குடும்பஸ்தரை மோதிய பஸ்

யாழ்ப்பாணம், ஓக 21

கொடிகாமம் பகுதியில் பாதசாரிக் கடவை ஊடாக கடக்க முற்பட்டவர் மீது தனியார் பஸ் மோதியதில் அவர் படுகாயம் அடைந்தார்.

இந்தச் சம்பவம் இரவு 7.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து தங்காலை நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸே இந்த நபர்

02

## இளைஞர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக 21

கொழும்புத்துறைப் பகுதியில் இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலை நடத்திய கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

02

## எம்.பி. பதவிக்காக எங்கள் தலைவர்கள் எந்த ஏமாற்று வேலையும் செய்வார்கள்



### சிவமகராசா நினைவு நிகழ்வில் மணிவண்ணன் சாட்டை

யாழ்ப்பாணம், ஓக 21

"நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காக எத்தகைய ஏமாற்று வேலைகளையும் செய்யக்கூடியவர்கள்தான் இன்று எமது தலைவர்களாகவுள்ளார்கள். இவர்கள்தான் கொள்கை, உரிமைக்காக போராடுவார்களா?"

-இவ்வாறு கேள்வியேழுப்பியுள்ளார் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன்.

தனது கொள்கைக்காக நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை ஏற்காதவர்தான் மாமனிதர் சிவமகாராசா என்றும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டுறவாளரும் முன்னாள் பாராளுமன்ற

02

## சகல இனங்களும் ஏற்கும் புதிய அரசமைப்பு தேவை

### அரசிடம் ரிஷாத் கோரிக்கை



கொழும்பு, ஓக 21

புதிய அரசமைப்பு மாற்றம் அனைத்து இனங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலும், நாட்டின் நலனுக்கு ஏற்புடையதாகவும் அமைய வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற

02

## தமிழர் உரிமைகளை அங்கீகரிக்கவேண்டும்

### சபையில் விக்கி கன்னி உரை

கொழும்பு, ஓக 21

தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கவேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்றில் வலியுறுத்

02

## மின்வெட்டு இனி இல்லை!

கொழும்பு, ஓக 21

இன்று வெள்ளிக்கிழமையுடன் நாளாந்த மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட கோளாறைச் சரி செய்ய நாடளாவிய ரீதியில் 4 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, பகலில் 1.45 மணி நேரமும், இரவு 1 மணி நேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வந்தது.

திருத்தப்பணிகள் விரைவில் முடிந்து வருவதால் இன்று வெள்ளிக் கிழமையின் பின்னர் மின்வெட்டு அமுல் படுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாதகலில் கடற்படைக்கு காணி சுவீகரிக்க முயற்சி

### மக்கள் கடுமையான எதிர்ப்பு



யாழ்ப்பாணம், ஓக 21

மாதகல் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு மேலதிகமாக தனியார் காணிகளைச் சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று சென்றபோது அப்பகுதி மக்கள் பெரும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான

02

## தமிழர்...

தினார்.

புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை வாழ்த்தி உரையாற்றக் கட்சிகளின் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன்போதே விக்னேஸ்வரன் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் முதற்கண் என் வாழ்த்தை தெரிவித்துக்கொள்கிறேன். உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும் இந்த நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியுமாகிய எனது தாய் மொழியிலும் ஆரம்பித்து பின்னர் எல்லா மக்களையும் இணைக்கும் மொழியிலும் எனது வாழ்த்தைக் கூறுகின்றேன். எமது பாராளுமன்ற பாரம்பரியத்தின் மிக உயர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளமைக்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்-என்றார்.

சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தன தனது நீண்ட அரசியல் பயணத்தின் ஊடாக பெற்றுக்கொண்டுள்ள அனுபவத்தை சபாநாயகர் பதவிக்கு நல்லமுறையில் பயன்படுத்துவார் என்றும் விக்னேஸ்வரன் நம்பிக்கை வெளியிட்டார்.

இன்றைய அரசு மிகவும் பலமான நிலையில் இருக்கிறது என்று சுட்டிக்காட்டி அதேபோல மறைந்த ஜே. ஆர். ஜெயவர்தனவின் கீழ் யானைப் பலத்துடன் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை ஏற்படுத்தி இன்று ஒரே ஒரு உறுப்பினர் என அளவுக்கு அதன் பலம் சுருங்கிவிட்டதாக தனதுரையில் கோடிட்டு காட்டிய நீதியரசர் விக்னேஸ்வரன், அதே பிழையை தற்போதைய பொதுஜன பெரமுன அரசும் விட்டு அதே பாதையை தெரிவு செய்யாது என்று நம்புவதாக கூறினார்.

"எமக்கு இப்பொழுது மிகவும் பலமான ஒரு அரசாங்கம் அமைந்துள்ளது. 1977 ஆம் ஆண்டு இதே மாதிரியான ஒரு அரசு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கீழ் இருந்தது. அந்த ஆட்சியின்போதே 1983 ஆம் ஆண்டு கலவரம் இடம்பெற்றது. அந்த காலத்து யானையாக இருந்து இன்று தனி ஒரு உறுப்பினராக குறுகிப்போயுள்ள பாதையை இந்த அரசும் நிச்சயமாக எதிர்காலத்தில் தொடரக்கூடும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன். கடந்த காலத்தில் நாம் விட்ட பிழைகளில் இருந்து பாடம் படித்து எல்லா சமூகங்களும் ஒருவருக்கு ஒருவர் மதிப்புடனும் சமனாகவும் உணருகின்ற வகையிலும் இலங்கை தாய் நாட்டின் பிள்ளைகள் நாம் என்ற இறைமையுடனும் பெருமையுடனும் நடைபோடும் வகையிலுமான சமாதானமும் செழிப்பும் மிக்க ஒரு காலத்தை ஏற்படுத்துவார்கள் என்றும் நம்புகிறேன். " என்று கூறினார்.

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றி அழுத்தம் திருத்தமாக தனது உரையில் விக்னேஸ்வரன் வலியுறுத்தினார்.

"குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையுடன் மரபு, பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் தேசம் என்று அங்கீகரிக்கப்படுவதன் பிரகாரம் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன் கடந்த காலம் பற்றிய தவறான வரலாற்று கண்ணோட்டங்களை களைந்தால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் உதயமாக முடியும் " என்று கூறினார்.

சிங்கள மேலாதிக்க அதிகாரத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதையும் நீதியரசர் தனது இந்த உரையில் திட்டவட்டமாக குறிப்பிட்டார்.

"சபாநாயகர் அவர்களே, பௌத்த மதத்தை பின்பற்றும் ஒரு நாட்டிலே, மேலாதிக்க அதிகார பிரயோகத்தை நாங்கள் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஏனென்றால், சிங்கள கிராமத்தவர்கள், ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை இருக்கும் என்பதற்காக பின்வரும் பழமொழியை கூறுவார்கள் என்பது எமக்கு தெரியும். அதாவது, (கல கல பே பல பல வே) முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும் என்பதே அது." என்று கூறினார்.

## பாதசாரிக்..

மீது மோதியதாக தெரியவருகிறது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த நாகதம்பிரான் வீதி, கொடிகாமம் என்ற முகவரியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, ரவிச்சந்திரன் என்பவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சகல இனங்களும்...

உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

09 ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு, நேற்றுக் காலை இடம்பெற்றபோது உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சரவையின் கன்னி அமர்வில், தற்போதைய அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர முடிவெடுத்து, அதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. காலத்துக்குக் காலம் அதிகாரத்துக்கு வரும் அரசுகள், அரசமைப்பில் மாற்றங்களைச் செய்துள்ளன.

அதேபோன்று, இனிவரும் காலங்களிலும் பதவிக்கு வரும் அரசுகளும் இன்னொரு மாற்றத்தை மேற்கொள்ளாத வகையில், இந்த அரசமைப்பில் சீர்திருத்தம் செய்யவேண்டும்.

உத்தேச அரசமைப்பு வெறுமனே, ஒரு சாராரையோ, ஒரு கட்சியையோ, ஒருசில இனவாதிகளையோ திருப்திப்படுத்துவதற்கு என்றில்லாமல், நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களையும் குறிப்பாக, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமின்றி, எல்லோருக்கும் நன்மையளிக்கக் கூடிய வகையில் அமையவேண்டும்.

அத்துடன், அவர்களது உரிமைகளை மதிக்கக் கூடிய வகையிலும் அது இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே, இந்நாட்டில் ஒரு நிலையான சமாதானத்தை எதிர்பார்க்க முடியும்.

சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட போது, பொருளாதாரத்தில் பலமடைந்திருந்த நமது நாடு பின்னர், காலப்போக்கில் இங்கு வாழ்ந்த ஓர் இனம் "தமக்கு தனி நாடு வேண்டும்" என்று போராடிய வரலாறு இருந்தது. அதன்மூலம், நாட்டின் பொருளாதாரம் அழிந்ததுடன் இலட்சக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன என்பதையும் மனதில்கொள்ள வேண்டும்.

அரசியலுக்காக, தேர்தல் காலங்களில் மட்டும் மக்களை உசுப்பேற்றும் அரசியல் கலாசாரத்தைக் கொண்ட கட்சிகளாக நாம் இருக்கின்றோம். எனவே, அரசமைப்பு மாற்றம் நிரந்தரமான ஒன்றாக இருக்கவேண்டும்.

புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு, எமது கட்சியின் சார்பில் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

பாராளுமன்ற வரலாற்றில் தங்களுக்கு நீண்ட அனுபவம் உண்டு. நீங்கள் பல உயர் பதவிகளை வகித்துள்ளீர்கள். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற நீங்கள், பல சர்வதேச கருத்தரங்குகளில் பங்குபற்றிய அனுபவம் கொண்டிருக்கின்றீர்கள். முதலமைச்சராகவும், அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி, அரசியல் அனுபவத்தைப் பெற்றிருக்கின்றீர்கள்.

எனவே, நீங்கள் பதவி வகிக்கும் உங்கள் காலத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி, ஒரு காவலனாகவும், உறுப்பினர்களது வரப்பிரசாதங்களை பாதுகாக்கின்ற ஒருவராகவும் செயற்படுவீர்கள் என்ற பூரண நம்பிக்கை எமக்குண்டு-என்றார்.

# மஹிந்த யாப்பா அபேவர்தன புதிய சபாநாயகராகத் தெரிவு



கொழும்பு, ஒக 21

9ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முதலாவது சபை அமர்வு நேற்று முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகியது. இதன்போது சபாநாயகர் பதவிக்காக மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை சபை முதல்வர் தினேஷ் குணவர்தன முன்மொழிந்தார்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வழி மொழிந்தார்.

அத்துடன், பிரதிச் சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டியவும், குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொள்ளப்பட்டார். சபை முதல்வராக தினேஷ் குணவர்தனவின் பெயரும், ஆளுங்கட்சி கொறடாவாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

## எம்.பி. பதவிக்கு...

உறுப்பினருமான மாமனிதர் சின்னத்தம்பி சிவமகாராசாவின் நினைவு தினம் நேற்று தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சட்டத்தரணி வி.மணிவண்ணன் மேலும் தெரிவிக்கையில்-

தெல்லிப்பழை என்று சொல்லும் போது முதலில் துர்க்கை அம்மன் ஆலயமும் தெல்லிப்பழை வைத்திய சாலையும் நினைவுக்கு வரும். மனிதர்கள் என்று கூறும்போது மாமனிதர் சிவமகாராசா மற்றவர் தங்கம்மா அப்பாக்குட்டி. இவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்தவர்கள்.

இன்று நினைவு கூருகின்ற சிவமகாராசா போன்றவர்கள் மக்களின் கொள்கை இலட்சியத்திற்காக இறுதி வரை உழைத்தவர்கள். கூட்டுறவாளராக, நாடாளுமன்ற உறுப்பினராக நமது ஈழநாடு பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எனப் பல பண்புகளை திறமைகளை கொண்ட அவர், முதல் முறையாக நாடாளுமன்றம் தெரிவான போது மக்களின் விடுதலைக்காக தனி நாடு கேட்டுப் போராடவேண்டும் என்றால் 6 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் சத்தியம் செய்து போராடமுடியாது என்பதற்காக தனது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்தவர்.

இதன் மூலம் தனது கொள்கை - இலட்சியம் என்பவற்றில் எத்தகைய உறுதியுடன் இருந்தார் என்பது உறுதியாகின்றது. அதன்பின்னர் போட்டியிட்டபோது மக்கள் தெரிவு கிடைக்கவில்லை. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்தும் மக்களுக்காகவே சேவை செய்து அதற்காகவே அவரது உயிரும் பறிக்கப்பட்டது.

மாமனிதர் சிவமகாராசா தனது கொள்கையில் உறுதியுடன் இருந்தமையால்தான் தனது முதல் தெரிவின் போது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறவில்லை. ஆனால் இன்றுள்ள எமது தலைவர்கள் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காக ஏமாற்றுவேலை செய்யக்கூடிய நிலையே உள்ளனர்.

மக்களின் உரிமை, தேசியம், கொள்கைக்காக போராடுபவர்கள் அதே கொள்கைக்காகப் போராடி எம்மைவிட்டு பிரிந்தவர்களையும் நினைவு கூரவேண்டும். அவ்வாறு செய்வதே நாம் அவர்களுக்கு செய்யும் நன்றிகடனில் ஒன்றாகும் - என்றார்.

## மாதகலில்...

காணியை நில அளவைத் திணைக்களத்தினர் கடற்படையினருக்கு சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணியை மேற்கொள்ள நேற்று அங்கு சென்றனர்.இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் அவர்கள் நில அளவைப் பணியை கைவிட்டு விட்டு திரும்பிச் சென்றனர்.

இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. இதன்போது ஏராளமான பொலிஸாரும் கடற்படையினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றிய பொலிஸார் அந்தக் காணி உரிமையாளரை அழைத்துப் பேசினர்.

காணி உரிமையாளர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்னம் சுகாஷ் சென்று கடற்படை மற்றும் பொலிஸாருடன் பேசினார்.

இதன்போது காணி உரிமையாளர்கள் காணியை வழங்க மறுத்தமையால் நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

## யாழ்...

வியாழக்கிழமை ஊடக சந்திப்பொன்றை நடத்தியது. இதன்போதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனோ அபாய காலத்தில் பல்கலைக்கழகத்தில் கற்றல் செயற்பாடுகள் நடைபெறாதமையால் விடுதிகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியிருந்த மாணவர்கள் வெளியேறியிருந்த நிலையில் தற்போது அதற்கான வாடகைகளைத் தருமாறு உரிமையாளர்கள் கோருகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் மிகவும் வறுமைப்பட்ட மாணவர்களே கல்வி கற்கின்றனர். இந்த வாடகைத் தொகையைக் கூட செலுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். இதற்கான தீர்வொன்றையும் வழங்கவேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக வடக்கு-கிழக்கு, மலையகம் என பல இடங்களிலும் இருந்து வந்து கல்வி கற்கும் மாணவர்கள் மிக வறுமை நிலையிலேயே உள்ளனர்.

அதேநேரம் பல்கலைக்கழகத்திலும் அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப்படுகின்றனர். இவற்றைக் கருத்திற்கொண்டு சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் உரிய நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்று மாணவர் ஒன்றியத்தினர் கோரியுள்ளனர்.

## இளைஞர்...

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

நெடுங்குளம், கொழும்புத்துறையைச் சேர்ந்த 25வயதுடைய கவிச்சந்திரன் சிவனேஸ்வரன் என்பவரே இதில் படுகாயமடைந்தார்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியது. அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பியது.

பழைய பகையைத் தீர்க்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர்.

ஈழநாடு
Eelanadu
21.08.2020 வெள்ளிக்கிழமை
சார்வரி, ஆவணி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# கயிற்றின் கீழ் குத்திக்கிழிக்க காத்திருக்கும் கத்திகள்!

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 16 ஆவது பாராளுமன்றம் கூடியதைத் தொடர்ந்து, அரசியல்வாதிகளுக்கான புதிய ஆடுகளம் திறந்திருக்கின்றது. இனி ஒவ்வொருவரது அரசியல் ஆட்டத்தையும் மக்கள் காணலாம். தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் இதுவரை கூட்டமைப்பின் உரைகளை மட்டுமே கேட்டுச் சலித்துப்போன மக்களுக்கு, இனிவரப் போகும் நாட்களில், விக்னேஸ்வரனதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினதும் உரைகள் புதிய சுவையை கொடுக்கலாம். பாராளுமன்றத்தின் கன்னி அமர்வில், சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் உரையிலேயே விக்னேஸ்வரன் தனது ஆட்டத்தை ஆரம்பித்துவிட்டார். கடந்த இரண்டு பாராளுமன்ற அமர்வுகளிலும் தனிக்காட்டு ராஜாக்களாக இருந்த, சம்பந்தன் மற்றும் சுமந்திரனது உரைகளை, பின்தள்ளிவிடக் கூடிய உரைகளை விக்கியும், கஜனும் ஆற்றக் கூடும். ஒப்பீட்டடிப்படையில் இது சம்பந்தனுக்கு நெருக்கடிதான். தனது இறுதிக் காலத்தில் கம்பீரமாக நிற்கலாமென்று எண்ணியிருந்த சம்பந்தனுக்கோ தலைவலி தொடங்கப் போகின்றது.

உண்மையில் நாடு எந்தத் திசையில் பயணிக்கப் போகின்றது என்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது. ஏனெனில் ராஜபக்ஷக்களின் திட்டம் என்னவென்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாது. 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதுடன் ஆரம்பமாகும் ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்டம் எதுவரை நீளப் போகின்றது? தற்போதிருக்கும் பாராளுமன்ற பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, அவர்கள் தாங்கள் விரும்பும் எதையும் செய்யலாம். அதாவது, அவர்களின் விருப்பம் எதுவரை நீண்டு செல்லுமோ, அதுவரையில் அவர்களது ஆட்டமும் நீளலாம். ஆனால், இதிலொரு சிக்கலுமுண்டு. அதாவது, ராஜபக்ஷக்கள் என்னதான் நாட்டுக்குள் பலமானவர்களாக இருந்தாலும்கூட, நாட்டை பொருளாதார ரீதியில் தூக்கிநிறுத்த வேண்டுமாயின் வெளித் தரப்புக்களிடம் கையேந்தித்தான் ஆகவேண்டும். அவ்வாறான நிலையில் நாட்டுக்குள் ஆடும் ஆட்டத்தை வெளித் தரப்புக்களுடன் ஆட முடியாது. அவர்களது ஆட்டத்துடன் கைகோர்க்க வேண்டிவரும். வெளியாருடனான ஆட்டத்தின் போது எவருடன் கையை இறுக்கமாகப் பற்றிக் கொள்வது, எவருடன் கையை தளர்வாகப் பற்றிக்கொள்வதென் பதிலும் சிக்கல்கள் ஏற்படலாம். 2015இல், மஹிந்த ராஜபக்ஷ சீனாவின் கைகளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு நடனமாட எத்தனித்த வேளையில்தான், ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனாலும் புதிய ஆட்சியை பொறுப்பேற்ற மைத்திரி- ரணில் தரப்பும் ஆட்டத்தை சரியாக ஆடியிருக்கவில்லை. ரணிலின் ஆட்டம் சிங்கள மக்கள் மத்தியில் ரசிக்கப்படவில்லை. இதன் காரணமாகவே இன்று ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறானதொரு மோசமானதொரு பின்னடைவை சந்தித்திருக்கின்றது.

மீண்டும் சிங்கள மக்கள் பலமானதொரு ஆட்சியை ராஜபக்ஷ சகோதரர்களிடம் ஒப்படைத்திருக்கின்றனர். இதற்கு மேல் ஒரு வெற்றியை ராஜபக்ஷக்கள் எதிர்காலத்தில் பெறப் போவதில்லை. இதுதான் அவர்களது வெற்றியின் உச்சம். ஆனால், ராஜபக்ஷக்கள் சிங்கள மக்களுக்கு முன்னால் காண்பித்துக்கொள்வது போன்று, நாட்டை முன்கொண்டு செல்வது அவ்வளவு எளிதானதல்ல. இந்தியா - சீனா - அமெரிக்கா என்னும் முக்கோண அரசியல் ஆடுகளமொன்றுக்குள் இலங்கை செல்லப் போகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிப்பிரமாண உரையில் கூறியது போன்று, என்னதான் ராஜபக்ஷக்கள் நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை பேணிக் கொள்ள விரும்பினாலும் கூட, இது ஒரு வகையில் கத்திகளின் கீழ் கட்டப்பட்டிருக்கும் கயிற்றில் நடப்பது போன்றதுதான். எந்த வேளையிலும் கயிறு சறுக்கி, குத்துவதற்கு காத்திருக்கும் ஏதோவொரு கத்திக்கு இலங்கை பலியாகநேரிடும். சிங்கள மக்கள் மத்தியில் தங்களின் செல்வாக்கை பாதுகாப்பதற்கு ஏற்ற வகையிலும், அதேவேளை வெளித் தரப்புக்களை அவர்களது தேவைகளுக்கேற்ப கையாள முற்படும், ஒரு கயிற்றின் மேல் நடக்கும் பயணத்தையே ராஜபக்ஷக்கள் செய்யப் போகின்றனர். அதன் விளைவுகளையே இனிவரப் போகும் காலம் நமக்கு உணர்த்தப் போகின்றது. இந்த ஆடுகளத்தை தமிழர் தரப்புக்கள் எவ்வாறு கையாளப் போகின்றன? அவர்களால் கையாள முடியுமா என்பதையும் தமிழ் மக்கள் பார்க்கப் போகின்றனர்.

# கல்விச் சீர்திருத்தம் தொடர்பிலான மக்கள் கருத்து கேட்க நடவடிக்கை



கொழும்பு, ஓக 21

புதிய கல்வித் திட்டம் குறித்து மக்களின் கருத்துகளை கேட்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் முதல் இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட ரீதியில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயரத்ன நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்பள்ளிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளதாக மகளிர் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

இதன் ஒரு கட்டமாக முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# நான்கு அரச வங்கிகளில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து ஆராயப்படும்

கொழும்பு, ஓக 21

நல்லாட்சி அரசின் 5 வருட காலப் பகுதிக்குள் நான்கு அரச வங்கிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி முறைக்கேடு மற்றும், நிதி கொள்ளைத்திட்ட முறைக்கேடு ஆகியவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையில் நால்வர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் விசாரணை அறிக்கையை மூன்று மாத காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் ஆராய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் தலைவராக மேல் நீதிமன்ற முன்னள் நீதிபதி சிசிர ரத்னாயக்க நியமிக்கப் பட்டுள்ளார். நிதி அமைச்சின் உறுப்பினர் ஒருவர் இந்தக் குழுவின் செயலாளராகவும் பட்டயக் கணக்காளர் சுசந்த த சில்வா, ஓய்வுபெற்ற மேலதிக கணக்காய்வாளர் நாயகம் டபுள்யூ. பிரேமாநந்த ஆகியோர் குழு உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பவும், அரச வங்கிகளில் இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் நிதி நிர்வாக முறைக்கேடுகள் தொடர்பில் ஆராயவும் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதத்துக்கு பிறகு கிடைக்கப் பெறும் அறிக்கையை நிதியமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 'இலங்கைத் தமிழும் தமிழரும்' ஆய்வரங்க நிறைவு நாள்

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ் நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் (Zoom) செயலி வாயிலாக முன்னெடுத்து வரும் 20 நாள்கள் இணையவழி ஆய்வு மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன.


உலகத் தமிழ்ச்சங்க இயக்குநர் கலாநிதி ப.அன்புச்செழியன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ்ச் சிற்றிதழ்கள் என்ற பொருளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் ஆய்வுரை ஆற்றுவார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் நிறைவுரை யாற்றுவார். உலகத் தமிழ்ச்சங்கத்தின் ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் ஐ.ஜான்சிராணி நிகழ்வுகளை நெறிப்படுத்துவார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

Zoom meeting ID : 477 159 8996
password : wts

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# முதலில் ‘19’ நீக்கப்படும்; பின்பே புதிய அரசமைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு நேற்று சபையில் அறிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

09ஆவது நாடாளுமன்றத்தைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து, அக்கிராசன உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தனது உரையில்-

ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் இலங்கை தேர்தல் வரலாற்றில் புரட்சியொன்றை ஏற்படுத்திய ஒரு முக்கிய தேர்தலாகும். ஸ்திரமான ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்காக 2ஃ3 அதிகாரத்தை பெற்றுத் தருமாறு நாம் மக்களிடம் கேட்டிருந்தோம்.

வரலாற்றில் முதற் தடவையாக விகிதாசார முறைமையின் கீழ் இடம்பெற்ற தேர்தல் ஒன்றில் 2/3 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் ஆணையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் அதன் நட்பு அணிகளுக்கும் பெற்றுத் தந்த நாட்டுப் பற்றுடைய மக்களுக்கு நான் முதலில் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

சர்வஜன வாக்குப் பலம் நாம் அனைவரும் மதித்துப் பாதுகாக்க வேண்டிய ஜனநாயக உரிமையாகும். எனவே இந்தத் தேர்தலில் தமது பெறுமதியான வாக்கைப் பயன்படுத்திய அனைத்து இலங்கை வாக்காளர்களுக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கிறேன்.

**மக்கள் ஆணை எமக்கு**

கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மிகப்பெரும் மக்கள் ஆணையை வழங்கியது என்மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாகவாகும். அந்த நம்பிக்கையை காப்பாற்றுவேன் என நான் வழங்கிய உறுதிமொழியை இதுவரையிலான எனது செயற்பாடுகளின் மூலம் நிரூபித்திருக்கிறேன்.

ஜனாதிபதித் தேர்தல் முதல் பாராளுமன்றத் தேர்தல் வரையான காலம் எமக்கு மிகவும் சவால்மிக்க ஒரு காலப்பகுதியாக இருந்தது. வீழ்ச்சியடைந்திருந்த ஒரு பொருளாதாரத்தையே நாம் பொறுப்பேற்றோம். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் நாம் சிறுபான்மையான ஒரு அரசாங்கத்துடனேயே செயற்படவேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக எமக்கு இக்காலப்பகுதியில் முழு உலகையும் ஆட்கொண்டிருந்த கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. கொவிட் 19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் உலகின் முக்கிய நாடுகள் கூட முடங்கியிருந்த நிலையில் அந்த சவாலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு எமக்கு இயலுமானது. நோய்த் தொற்று நிலைமை பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெளிநாடுகளினதும் பாராட்டைப் பெற்றது.

இந்த ஒன்பது மாதக் காலப் பகுதியில் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் நாம் நாட்டை நிர்வகித்த முறைபற்றி நாட்டு மக்கள் தெளிவுடன் உள்ளார்கள் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு கிடைத்துள்ள மிகப் பெரும் மக்கள் ஆணை எடுத்துக்காட்டுகிறது. அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்டு வரும் மாற்றத்திற்கு மக்கள் மதிப்பளித்து வருகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளாக பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்கிறோம். மக்க ளின் இறைமையை பாதுகாப்பதற்கு அப் போது தான் முடியுமாக இருக்கும்

எமது நாட்டு அரசமைப்பின் பிரகாரம் எனது பதவிக்காலப் பகுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாகவும், பௌத்த சாசனத்தை பாதுகாத்து வளப்படுத்துவதாகவும் நான் உறுதியளித்திருக்கின்றேன். அதற்கு ஏற்ப அரச நிர்வாகத்திற்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நான் முன்னணி பௌத்த பிக்குகளைக்கொண்ட ஆலோசனை சபை ஒன்றை அமைத்துள்ளேன். அதேபோன்று தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கும் எமது பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் நான் விசேட செயலணி ஒன்றை அமைத்துள்ளேன்.

**பௌத்தத்துக்கு முன்னுரிமை**

பௌத்த சமயத்திற்கான முன்னுரிமையை உறுதிசெய்யும் அதேநேரம், இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் தாம் விரும்பும் சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் மிகச் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதுவும் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது. எமது பாரம்பரிய மரபுரிமைகளையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்கும் கிராமிய கலைகளை பாதுகாத்து மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் காரணமாக நாம் அரசை பொறுப்பேற்கும்போது மக்கள் மத்தியில் நாட்டின் பாதுகாப்பு பற்றிய நம்பிக்கை பெருமளவு வீழ்ச்சியடைந்திருந்தது. எமது அரசின் முக்கிய கொள்கை நாட்டின் பாதுகாப்பாகும் என்பதை உறுதி செய்து பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையை மறுசீரமைத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தை போக்கி நாட்டின் பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். எந்தவொரு பிரஜைக்கும் தனதும் தனது குடும்பத்தினதும் பாதுகாப்புப் பற்றி எவ்வித அச்சமும் இன்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்றை நாம் மீண்டும் ஏற்படுத்தியிருக்கிறோம்.

**சமூகச் சீரழிவுகளை தடுத்துள்ளோம்**

நான் உறுதியளித்தவாறு பொதுவான மக்கள் வாழ்க்கைக்கு தடையாக உள்ள பாதாள உலகச் செயற்பாடுகள், போதைப் பொருள் பிரச்சினை போன்ற சமூகச்சீரழிவுகளில் இருந்து மக்களை மீட்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு இருப்பது மக்களின் நம்பிக்கை மேம்படுத்துவதற்கு காரணமாகியுள்ளது.

நாம் உறுதியளித்தவாறு ஒழுக்கமான, பண்பாடான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்பி வருகின்றோம். இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தில் தெளிவானதொரு மாற்றத்தை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அரச நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிப்பதற்காக அதுவரையில் இருந்துவந்த சம்பிரதாயங்களை மாற்றி நிபுணர் குழுவொன்றின் ஊடாக தகைமைகளை கண்டறிந்து நியமனங்களை மேற்கொள்ளும் முறையான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குடும்பத்தினர், நண்பர்கள், தனக்கு வேண்டியவர்களை நியமிக்காது தொழில் வல்லுனர்கள், தொழில் முயற்சியாளர்கள், கல்வியியலாளர்களைக் கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் கொள்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

**விவசாயிகளுக்கு பாதுகாப்பு**

அதேபோன்று நாம் உற்பத்தி பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளுக்காக அதிக விலையை பெற்றுக்கொடுத்துள்ளோம். ஏற்றுமதி பயிர்களை மீள்ஏற்றுமதி நடவடிக்கைக்காக இறக்குமதி செய்வதை நிறுத்தியும், இந்த நாட்டில் பயிரிட முடியுமானவற்றை இறக்குமதி செய்வதை முழுமையாக நிறுத்தியும் சுதேச விவசாயிகளை பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். விவசாயிகளுக்கு தேவையான உரத்தினை இலவசமாக வழங்கினோம். நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டிருந்த விவசாயக் காணிகளில் மீண்டும் பயிரிடுவதற்கு மக்களை ஊக்குவித்தோம். இவை அனைத்தின் ஊடாகவும் நாம் இந்த நாட்டின் விவசாயத் துறைக்கு புத்தெழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

நாம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் சுதேச தொழில்முயற்சியாளர்களை இலக்காகக்கொண்டு வரிச் சலுகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம். வியாபாரத் துறையை வலுவூட்டுவதற்காக வட்டி விகிதத்தை குறைத்தோம். உள்நாட்டு வர்த்தகர்கள், தொழிற்துறையாளர்களை பாதுகாப்பதற்காக போட்டித் தன்மை வாய்ந்த இறக்குமதிகளை மட்டுப்படுத்தினோம்.

இந்த தேர்தலில் மக்கள் உற்சாகமாக எமக்கு ஆதரவு வழங்கியிருப்பது இந்த வகையில் எங்களைப்பற்றி அவர்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையே காரணம் என்பது தெளிவனதாகும். நாம் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்வோம்.

மக்கள் வழங்கிய ஆணையை மிகச் சரியாக புரிந்துகொள்வது இங்கு முக்கியமானதாகும். என் மீதும் பிரதமர் உள்ளிட்ட புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாம் மதிக்கிறோம். மக்கள் இவ்வளவு பெரிய மக்கள் ஆணையை அரசுக்கு வழங்கி இருப்பது எதனை எதிர்பார்த்து என்பது பற்றி நாம் அறிவோம். எக்காரணத்தினாலும் அந்த எதிர்பார்ப்புகள் வீண் போவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

மக்கள் வாக்குகளினால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதி ஒருவரின் அடிப்படை பொறுப்பு மக்கள் சேவையாகுமென்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்த அனைத்து பதவிகளும் பொறுப்புக்களே அன்றி வரப்பிரசாதங்கள் அல்ல என்பதை நினைவில் வைத்து மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

நான் இந்தத் தேர்தலில் எமது அணியை பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து அபேட்சகர்களுக்கும் ஆதரவு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் சுற்றுப் பயணம் செய்தேன். அரசியல் கூட்டங்களுக்குப் பதிலாக இந்த சுற்றுப்பயணங்களின்போது நான் மக்களிடம் சென்று நேரடியாக அவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்தேன். மக்கள் முன் வைத்த கோரிக்கைகளில் மிகப் பெரும்பாலானவை பொதுத் தேவைகளேயன்றி தனிப்பட்ட தேவைகள் அல்ல. சுதந்திரம் பெற்று 72 வருடங்களின் பின்னரும் மக்களின் பெரும்பாலான சாதராணமான தேவைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை.

**மக்கள் பிரச்னைகளை விரைவில் தீர்ப்போம்**

பல ஆண்டுகளாக தாம் வாழ்ந்து வரும் காணிகளுக்கு உரிய உறுதிகள் கிடைக்கப் பெறாத மக்கள் உள்ளனர். நாம் அவர்களுக்கு உரிய முறைமைகளின் படி உறுதிகளை வழங்குவோம். உரிய மாற்றீடுகள் இன்றி பல பரம்பரைகளாக வாழ்ந்து வந்த, தாம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலங்களில் இருந்து எவரையும் வெளியேற்ற மாட்டோம்.

யானைகள் - மனிதர்கள் மோதல் இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு தீர்வொன்றை கண்டறிவதற்கு தற்போது நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருப்பது நிலையான தீர்வொன்று தேவை எனும் காரணத்தினாலாகும்.

நாடளாவிய ரீதியில் நம்ப முடியாதளவு அதிக சதவீதமான மக்கள் குடிதண்ணீர் இன்றி கஷ்டப்படுகின்றனர். நாம் இந்த மனிதாபிமான பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். ஒரு தேசிய கொள்கையாக அடுத்து வரும்சில ஆண்டுகளில் அனைத்து பிரதேசங்களுக்கும் குடிநீரை பெற்றுக்கொள்ள நாம் ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்போம்.

**பொருத்தமான கல்வி**

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வி பெறுவதற்கான பொருத்தமான பாடசாலைகளைப் பெற்றுத் தருமாறு கோருகின்றார்கள். போதுமானளவு தேசிய பாடசாலைகள் இல்லாத குறை எல்லா இடங்களிலும் உள்ளது. பெரும்பாலான பாடசாலைகளில் பெருமளவு குறைபாடுகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக் குறை, போதுமானளவு விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வாசிகசாலைகள், விளையாட்டு வசதிகள் இல்லாமை பற்றி அடிக்கடி கூறக் கேட்கிறோம். பொருளாதாரத்திற்கு வினைத்திறனான பங்களிப்பை வழங்குவதற்காக விஞ்ஞான, தொழிநுட்ப பாடங்களை கற்குமாறு நாம் பிள்ளைகளிடம் கூறினாலும் அதற்கான அடிப்படை வசதிகள் பெரும்பலான பாடசாலைகளில் இல்லை.

இந்த நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் தாம் விரும்பும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான கல்வியை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கு உதவுவதற்கும் அரசாங்கம் மேற்காண்டு வரும் செலவுகள் எதிர்காலத்திற்காக செய்யப்படும் முதலீடாகும். புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அமைச்சுகளின் ஊடாக நாம் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்போம்.

**வைத்தியசாலை அபிவிருத்தி**

கிராமிய வைத்தியசாலைகளில் வளங்களும் வசதிகளும் மிகக் குறைவாக உள்ளன. வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஏனைய வைத்தியசாலை ஊழியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. சில பிரதேசங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இலவச சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்கும் போது ஏற்படும் இந்த நிலைமைகளை நாம் இல்லாமல் செய்வோம்.

ஆயுர்வேத மருத்துவத்தையும் சுதேச வைத்தியத் துறையையும் முன்னேற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதிக அந்நியச் செலாவணியை செலவு செய்து மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு பதிலாக பல மருந்துகளை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம். மருந்து இறக்குமதியின்போது இடம்பெறுகின்ற பெரும் ஊழல் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் காரணத்தினால் தான் மருந்து உற்பத்திக்கு தனியான இராஜாங்க அமைச்சொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டின் மக்களில் அதிகளவானவர்கள் இன்றும் சுயதொழில்களை செய்வதன் மூலமே வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக உள்ளனர். அவர்கள் கேட்பதெல்லாம் உரிய காலத்திற்கு நீரையும் உரத்தையும் பெற்றுத் தருமாறு மட்டுமேயாகும். இந்த கோரிக்கைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். அந்த வகையில் நாடளாவிய ரீதியில் குளங்களை புனரமைப்பதுடன், நீர்ப்பாசன அபிவிருத்திக்கு விரிவான நிகழ்ச்சித்திட்டமொன்றை நாம் முன்னெடுப்போம்.

வேலை வாய்ப்பின்மை இன்று இளைஞர் தலைமுறை முகங்கொடுக்கும் ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாகும். இதற்காக நாம் குறுகிய கால, நீண்டகால பல தீர்வுகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம்.

**வேலைவாய்ப்பு திட்டம்**

நாம் தற்போது நாட்டில் வாழும் வறிய குடும்பங்களை இலக்காகக்கொண்டு ஒரு இலட்சம் தொழில்களை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். அதனோடு இணைந்ததாக 50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கு ணவதற்கும் அவர்களிடமிருந்து வினைத்திறனான சேவையை பெற்றுக்கொள்வதற்காக முறையான பயிற்சி ஒன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரச தொழில்களை வழங்கும்போது நாட்டில் மிகுவும் வறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று தொழில் வாய்ப்புகளை வழங்கும்போது அனைத்து மாகாணங்களுக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

அரச நியமனம் ஒன்றை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் நாட்டுக்கு வினைத்திறனான சேவையை வழங்க வேண்டும். எனவே எந்தவொரு அமைச்சுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் தேவையற்ற வகையில் ஆட்சேர்ப்புகள் செய்யப்படமாட்டாது.

தத்தமது துறைகளில் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு தொழில்

வாய்ப்புகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுமாறு அனைத்து அமைச்சர்களிடமும் இராஜாங்க அமைச்சர்களிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களில் அந்தந்த துறைகளில் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று குறித்த துறைகளில் சுயதொழில் மேம்பாட்டுக்கும் தொழில் முயற்சிகளை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எமது பொறுப்பும் கடமையுமாக இருக்க வேண்டியது தொழில்களை உருவாக்குவதேயன்றி தொழில்களை வழங்குவதல்ல.

**பொருளாதார புத்தெழுச்சி**

உள்நாட்டு மற்றும் பூகோள சவால்களை வெற்றி கொள்ளும் பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்த வேண்டுமானால் நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். இம்முறை இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உண்மையான பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்துவதற்காக மக்கள் மைய பொருளாதாரம் ஒன்றின் தேவையை நாம் கண்டறிந்துள்ளோம். அமைச்சுக்களை ஒதுக்கும்போதும் அவற்றுக்கான விடயதானங்களை தீர்மானிக்கும் போதும் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மீது தாக்கம் செலுத்தும் விவசாயம். பெருந்தோட்டத் துறை, மீன்பிடிக் கைத்தொழில் அதேபோன்று பாரம்பரிய கைத்தொழில்கள், சுயதொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவது சம்பந்தமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதைப் போன்று ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் எமது அடிப்படை இலக்குகளாகும்.

தற்போது எமது ஏற்றுமதி பெருந்தோட்டப்பயிர்களான தேயிலை, தென்னை, இறப்பர் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் திருப்திகரமான நிலையில் இல்லை.

தேயிலை பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் சிறிய மற்றும் நடுத்தர தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் அரசாங்கம் உதவிகளைச் செய்யும். மூடப்பட்டுள்ள தேயிலைச் தொழிற்சாலைகளின் காரணமாக அவர்கள் அதிக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவற்றை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன். முறைகேடுகளை ஒழித்து உயர் தரங்களுடன் கூடிய தேயிலை ஏற்றுமதியை ஊக்குவிப்போம். 'Ceylon Tea' வர்த்தக சின்னத்திற்கு உள்ள அங்கீகாரத்தை பலப்படுத்துவோம்.

தென்னையை புதிதாக பயிரிடுவதற்கு ஊக்குவிப்புகளை வழங்குவோம். இறப்பருக்கு உரிய விலையை பெற்றுக் கொடுப்பதற்காக இந்நாட்டில் தயாரிக்கப்படும் இறப்பர் பாவனை, இறப்பர் சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிப்போம். செம்பனை பயிர்ச் செய்கையை நாம் முற்றாக நிறுத்துவோம்.

**ஏற்றுமதி பயிர் உற்பத்தி நாம் ஊக்குவிப்போம்**

மிளகு, கறுவா போன்ற ஏற்றுமதி பயிர் உற்பத்தியை நாம் ஊக்குவிப்போம். விவசாய உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதன் ஊடாக விவசாயிகளுக்கு ஸ்திரமான விலையை பெற்றுக் கொடுப்பதுடன், பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

அமைச்சுகளுக்கு பொறுப்புக்களை வழங்கும்போது நகர மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய பல்வேறு துறைகளை இனங்கண்டு அவற்றுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கவும் அவர்களுக்கான விடயதானங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனித வள அபிவிருத்தியை நாம் முன்னுரிமைக்குரியதாக இனங்கண்டு இருப்பதால் அமைச்சுக்களை ஒதுக்கும்போது கல்வித்துறையை ஒரு அமைச்சின் கீழ் கொண்டு வந்து, அதில் வேறுபட்ட பொறுப்புகளுக்காக நான்கு இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ளோம். முன்பள்ளிப் பாடசலைகள், கல்வி மறுசீரமைப்பு, திறன் விருத்தி, அறநெறிப் பாடசாலைகள், பிக்குகளுக்கான கல்வி ஆகிய துறைகளுக்கு தனியான இராஜாங்க அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது அவற்றில் உள்ள முக்கியத்துவத்தின் காரணமாகவே ஆகும்.

எமது எதிர்கால இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டுமாயின் தொழிநுட்ப கல்விக்கு விசேட கவனம் செலத்த வேண்டும். 06ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரை கல்வி மறுசீரமைப்பில் நாம் இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வியை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களின் கொள்ளளவை அதிகரிப்பதுடன், திறந்த பல்கலைக்கழக முறைமையை முன்னேற்றுவதற்கும் தொலைக் கல்வியை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். பாடத்துறைகளை மறுசீரமைத்து இந்த பட்டப்படிப்புகள் பொருளாதாரத்திற்கு நேரடியாகப் பங்களிப்பு வழங்கக்கூடிய துறைகளாக உறுதி செய்யப்படும்.

**மின் உற்பத்தி**

மின்சாரத்தின் விலை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கிய காரணியாகும். எனவே மீள்பிறப்பாக்க, சக்தி வள உற்பத்தி மார்க்கங்களை மேம்படுத்துவதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்ப்பதற்காக புதிய தொழிநுட்ப பாவனைக்கும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஆக்கத்திறன்வாய்ந்த வகையில் புதிய சந்தை வாய்ப்புகளை கண்டறிவதற்கும் வர்த்தகர்களுக்கு உதவுவதற்கும் குறித்த அமைச்சுக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

எமது நாடு இயற்கை வளம் நிறைந்த ஒரு வளமான நாடு என்ற போதிலும் பெறுமதி சேர்க்கும் கைத்தொழில்கள் இன்னும் சர்வதேச மட்டத்திற்கு முன்னேறவில்லை. இரத்தினக்கற்கள், கனிய மணல் போன்ற இயற்கை வளங்களை ஏற்றுமதி செய்யும்போது பெறுமதி சேர்த்து நாட்டுக்கு அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது பாரம்பரிய கைத்தொழில்களான பத்திக், சுதேச ஆடைகள், பித்தளை, பிரம்புகள், மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள், இரத்தின கற்கள், ஆபரணங்கள் கைத்தொழிலை உரிய வகையில் முன்னேற்றுவதற்கும் சுயதொழில்களை ஊக்குவிப்பதற்கும் புதிய தொழில்களை உருவாக்குவதற்கும் வர்த்தக துறையை கட்டியெழுப்பி பெருமளவு வெளிநாட்டு வருமானத்தை நாட்டுக்கு பெற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும்.

நாட்டு மக்களில் 1/3 பகுதியினர் விவசாயம், பெருந்தோட்டத்துறை, மீன்பிடிக் கைத்தொழில் ஆகியவற்றை ஜீவனோபாயமாக கொண்டுள்ளனர். நாம் இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்காக சம்பிரதாய முறைமைகளை விஞ்சிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அனுகுமுறைகளின் தேவை உள்ளது. விவசாயத் துறை, பெருந்தோட்டத்துறை மற்றும் மீன்பிடி, கடற்றொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளை நேரடியாக இலக்காகக் கொண்டு அமைச்சுக்கள் ஒதுக்கப்பட்டிருப்பது இதற்குத் தேவையான உரிய கவனத்தை வழங்குவதற்கே ஆகும்.

உயர் தரம்வாய்ந்த விதைகளை உள்நாட்டில் உற்பத்திசெய்து, அவற்றை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த பொதியிடல் மற்றும் போக்குவரத்து முறைமைகளை அறிமுகப்படுத்தி வீண்விரயத்தை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். பசும்பால் உற்பத்தி மற்றும் முட்டை உற்பத்தியையும் நாம் முன்னேற்றுவோம்.

நச்சுத்தன்மையற்ற உணவை உற்பத்தி செய்யும் நோக்குடன் அடுத்த தசாப்தத்திற்குள் இலங்கையின் விவசாயத் துறையை முழுமையாக சேதன பசளைப் பாவனைக்கு மாற்றும் வகையில் உள்நாட்டில் சேதன பசளை உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

**மீன்பிடி அபிவிருத்தி**

மீன்பிடித் கைத்தொழிலில் பாரிய முன்னேற்றத்தை கொண்டுவர நாம் எதிர்பார்க்கின்றோம். கடலினால் சூழப்பட்டுள்ள எமது நாட்டுக்கு மீன் இறக்குமதியை நாம் நிறுத்த வேண்டும். மீன்பிடி கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு தேவையான புதிய தொழிநுட்பத்தையும் இயந்திரங்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு முறையான நிகழ்ச்சித் திட்டமொன்றை நாம் அறிமுகப்படுத்துவோம். ஆழ்கடலில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலநாள் படகுகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக அனைத்து மீன்பிடி துறைமுகங்களையும் நவீனமயப்படுத்துவதுடன், தேவைக்கு ஏற்ப புதிய துறைமுகங்களை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுப்போம்.

சட்டவிரோதமான சர்வதேச பலநாள் படகுகளின்மூலம் இலங்கை கடற்பகுதியில் மேற்கொள்ளப்படும் சுரண்டலை நிறுத்துவோம். நன்னீர் மீன்வளர்ப்பு கைத்தொழிலை முன்னேற்றுவதற்கும் புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்துவது எமது திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அனைத்து அமைச்சுக்களுக்கும் இராஜாங்க அமைச்சுக்களுக்கும் தமது விடயதானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தெளிவாக வேறுபடுத்தி வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர்களினால் குறித்த துறைகளின் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதுடன், இராஜாங்க அமைச்சுக்களினால் செயற்பாடுகள், வினைத்திறன், கண்காணிப்பை மேற்கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை தமது அமைச்சுக்களுக்கு நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாலும் நிதிப் பொறுப்பு தம்மிடம் உள்ள காரணத்தினாலும் இராஜாங்க அமைச்சர்களுக்கு தடையின்றி தமது பொறுப்புக்களை நிறைவேற்ற முடியும்.

**வினைத்திறனான அரச சேவைகள்**

அரசசேவையின்மூலம் தாம் எதிர்பார்க்கும் சேவை வினைத்திறனாகவும் உரிய வகையிலும் கிடைப்பதில்லை என பொதுமக்களிடம் குற்றச்சாட்டு உள்ளது. எனவே உங்களின் கீழ் உள்ள அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனாகவும் உடனடியாகவும் பெற்றுக்கொடுக்குமாறு நான் அமைச்சர்களிடமும் இராஜாங்க அமைச்சர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். மக்களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு எவ்வித பெறுமானத்தையும் கொண்டு வராத சில நிறுவன செயற்பாடுகளினால் ஏற்படுவது கால விரயம் மட்டுமே என நான் கடந்த காலத்தில் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு சென்ற வேலையில் கண்டுகொண்டேன். மக்களுக்கு சேவைகளை வழங்கும் போது பின்பற்றும் பாரம்பரிய முறைமைகளுக்கு பதிலாக நிறுவன செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொண்டு மக்களுக்கு இலகுவாகவும் விரைவாகவும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக புதிய முறைமைகளை நீங்கள் அறிமுகப்படுத்த வேண்டும். இதற்காக முடியுமானளவு புதிய தொழிநுட்ப தீர்வுகளை கண்டறிய வேண்டும்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் வீண் விரயத்தையும் ஊழலையும் ஒழிப்பதாக நாம் மக்களுக்கு உறுதியளித்திருந்தோம். இது எம் அனைவரினதும் முக்கிய பொறுப்பாகும். அனைத்து அமைச்சுக்கள், நிறுவனங்களில் வீண்விரயத்தையும் ஊழலையும் முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுப்போம். வீண்விரயம், ஊழலுடன் சம்பந்தப்படுபவர்களுக்கு அவர்களது தராதரங்களை பொருட்படுத்தாது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் பின்னிற்க மாட்டேன்.

அரசாங்கம், அமைச்சு மற்றும் அரச துறையின் ஊடாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்து கொள்வதன் முன்னேற்ற நிலைமைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படும்.

ஏதேனும் ஒரு அமைச்சு அந்த இலக்குகளை அடைவதில் பின்னிற்குமாயின், அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நான் ஒருபோதும் பின்னிற்க மாட்டேன்.

தற்கால அரசியல் கலாசாரத்தில் பெரும்பாலும் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் மக்களிடம் செல்வதை விட்டுவிடுகின்றனர் என்பது அண்மைக் காலத்தில் நான் நாடளாவிய ரீதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் மக்கள் முன்வைத்த மனக்குறைகளில் இருந்து தெரிய வந்தது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி மக்களிடம் சென்று அவர்களது உண்மையான பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அரசமைப்பு மாற்றம்**

ஒரு ஜனநாயக நாட்டின் வெற்றிக்கு அதன் அரசமைப்பே அடிப்படையாகும். 1978 முதல் 19 முறை திருத்தப்பட்டுள்ள எமது அரசியலமைப்பில் உள்ள உறுதியற்ற தன்மை, சிக்கல்கள் காரணமாக தற்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் உறுவாகியுள்ளன. அரசியலமைப்பில் மாற்றத்தை செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள காரணத்தினால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன் பின்னர் அனைவருடனும் இணைந்து நாட்டுக்கு தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்போம். இதன் போது இந்நாட்டின் அனைத்து மக்கள் சம்பந்தமாகவும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவுக்கு முதலிடம் வழங்குவோம்.

தெளிவான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத, தீவிரவாதத்தின் அழுத்தங்களுக்கு தொடர்ச்சியாக அடிபணியும், நிலையற்ற பாராளுமன்றம் ஒரு நாட்டுக்கு பொருத்தமானதல்ல. புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் போது தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றங்களை செய்யவேண்டியது அவசியமாகும். விகிதாசார தேர்தல் முறைமையில் உள்ள சாதகமான பண்புகளை பாதுகாக்கும் அதேநேரம் பாராளுமன்றத்தின் ஸ்திரத்தன்மையையும் மக்களின் நேரடி பிரதிநிதித்துவத்தையும் உறுதிசெய்யும் வகையில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

நான் எனது நாட்டை நேசிக்கின்றேன். நான் எனது நாடு குறித்து பெருமையடைகிறேன். எனக்கு எனது நாடு பற்றிய ஒரு தொலைநோக்குள்ளது. எமது நோக்கம் வினைத்திறன் மிக்க பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்கப்பண்பாடான சமூகத்தைக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதாகும். இதுவரை நாம் மேற்கொண்ட அனைத்து செயற்பாடுகளையும் போன்று, இதன் பின்னரும் செயற்படுவதற்காக எதிர்பார்க்கும் நடவடிக்கைகளை திட்டமிடுவதும் இந்த நோக்கங்களின் அடிப்படையிலேயாகும்.

நாம் வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வந்தடைந்துள்ளோம். மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு பெரும் மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். ஏந்தவொரு சக்திக்கும் அடிபணியாது இந்த நாட்டின் இறைமையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்து நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்வதற்கான பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்கால தலைமுறைக்காக தற்கால தலைமுறை அந்த பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

இது எம் அனைவரினதும் தாய் நாடு. எனவே இனம் மதம் கட்சி பேதமின்றி நாம் அனைவரும் நாட்டுக்காக ஒன்றுபடவேண்டிய சந்தர்ப்பம் வந்துள்ளது. மக்களுக்கு நாம் உறுதியளித்த சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக என்னுடன் ஒன்றிணையுமாறு நான் உங்கள் அனைவருக்கும் நட்புக்கரம் நீட்டி அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

●

செய்திகள்

# ரணிலின் தவறான முடிவுகளே இன்றைய நிலைக்கு காரணம்

## ஐ.தே.க பிக்குகள் முன்னணி சாடல்



கொழும்பு, ஓக 21

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு, ரணில் விக்ரமசிங்கவை தாம் கேட்டுக் கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.**

**எனினும் தமது கோரிக்கையை ரணில் விக்ரமசிங்க நிராகரித்தார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிக்குகள் முன்னணியின் பிரதம செயலாளர் தினியாவல பாலித்த தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 26 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ரணில் விக்ரமசிங்கவால் எதனையும் செய்ய முடியவில்லை. அவர் எடுத்த பிழையான தீர்மானங்களே இன்றைய நிலைக்கு காரணம். நாம் அவருடன் தனியாக பேசினோம். எம்மால் கையளிக் கப்பட்ட கடிதத்தை அவர் போபிட்டிய தேரரின் முகத்தில் வீசி அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என கூறினார்.

ஆகவே, அவ்வாறான தலைவருடன் எப்படி முன்நோக்கி பயணிப்பது? ரணிலால் எதிர்காலத்தில் 10 தேரர்களின் ஆதரவைக்கூட பெற முடியாது. மஹிந்தவுடன் 14,000 தேரர்கள் உள்ளனர். காரணம் அவர் தேரர்களை கௌரவப்படுத்துகின்றார்- என்றார்.



# கிளிநொச்சி பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு!

கிளிநொச்சி, ஓக 21

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தர்மக்கேணி கிராமத்தில் வயல் விதைப்பு செய்வதற்காக காணி துப்புரவு பணியில் ஈடுபட்டபோது காணி உரிமையாளரால் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் பளை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் அவற்றை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றனர்.



# சங்ககார, மஹேலவுக்கு அழைப்பு விடுத்த நாமல்

கொழும்பு, ஓக 21

இலங்கையின் கிரிக்கெட் பிரபலங்களான குமார் சங்ககார மற்றும் மஹேல ஜயவர்த்தன ஆகியோரை தேசிய விளையாட்டுச் சபையில் அங்கம் வகிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

விளையாட்டுத்துறை தொடர்பான கொள்கை வகுப்பதில் இந்தக் குழு, அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும்.

1973 ஆம் ஆண்டின் விளையாட்டுச் சட்டத்தின் கீழ் (பிரிவு 25 பிரிவு 4) இரண்டு ஆண்டுகளுக்கு தேசிய விளையாட்டுச் சபை நியமிக்கப்படவுள்ளது. சங்ககார மற்றும் மஹேல தவிர வேறும் சில முக்கிய விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள் இந்தக் குழுவில் பெயரிடப்படவுள்ளனர்.

விளையாட்டுத்துறையை வளர்ப்பது தொடர்பான விடயங்கள் குறித்து அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதே அவர்களின் முக்கிய பணியாக இருக்கும்.

# தகவல்கள் அறியும் உரிமைக்கு 20 ஆம் திருத்தத்தில் முதலிடம்

## உதய கம்மன்பில உறுதி

கொழும்பு, ஓக 21

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் பல விடயங்களை நீக்கி 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை மேற்கொள்ளும் போது தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை அடிப்படை உரிமையாக இருப்பது போன்ற விடயங்களைப் பாதுகாப்பது தொடர்பில் கூடுதலாகக் கவனம் செலுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளரகளுடனான சந்திப்பில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேடமாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தை தற்போது 5 வருடங்களுக்கு வரையறுக்கப்படுவதைப் போன்று இதனை அவ்வாறே முன்னெடுப்பதற்கும் ஒருவர் இரண்டு முறை ஜனாதிபதிப் பதவியை வகிப்பது தொடர்பான விடயங்களிலும் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் புதிய அரசமைப்புக்கான யாப்பைத் தயாரிப்பது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதில் திருத்தங்கள் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. அரசமைப்பு திருத்தம் குறித்து அமைச்சரவை ஆவணம், அமைச்சரவைக் குறிப்பு, திருத்தச்சட்டம் முதலானவை தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக ஐந்து அமைச்சர்களைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதே போன்று அமைச்சரவை துணை குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

நீதி அமைச்சர் அலி சப்ரி, கல்வி அமைச்சர் பேராசிரியர். ஜி.எல்.பீரிஸ், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரும், நானும் (அமைச்சர் உதய கம்மன்பில) இந்த அமைச்சரவைக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மதிப்பீடுகளை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அவற்றைச் சமர்ப்பிப்பார்கள்.

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக புத்திஜீவிகள் குழுவை நியமிப்பதற்குத் தேவையாயின் அமைச்சரவைக்கு சிபாரிசு செய்வதற்கு அமைச்சரவையினால் நீதி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக அவர் பெயர் விபரங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பார். நீதி அமைச்சர் திருத்த வரைவுச் சட்டத்தை அமைச்சகத்துக்குச் சமர்ப்பிப்பார்- என்றார்.

# உயர்கல்வி, ராஜாங்க அமைச்சர் பதவிக்கு ஆள் தேடுகின்றது அரசு

கொழும்பு, ஓக 21

உயர்கல்வி ,ராஜாங்க அமைச்சர் பதவிக்குப் பொருத்தமான நபரை நியமிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

அதேவேளை இந்தப் பதவிக்கு விஜயதாஸ ராஜபக்ஷவை முன்மொழியப்பட்டது. ஆனால் அவர் அந்தப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியைத் தவிர ராஜாங்க அமைச்சுப் பதவியை ஒருபோதும் வகித்ததில்லை என விஜயதாஸ கூறியுள்ளார்.

இவ்வேளையில் விஜேதாஸ இந்தப் பதவியை ஏற்கவில்லை. என்றால், பொருத்தமான மற்றொரு நபரை நியமிக்க அரசு பரிசீலித்து வருகிறது எனக் குறிப்பிடப்படுகிறது.

# வவுனியாவில் ஒருவரின் சடலம் மீட்பு

வவுனியா - பறயனாலங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் வீதித்தடைக்கு அருகாமையில் அடையாளம் தெரியாத ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பறயனாளங்குளம் வீதிக்கரையில் இருந்த சிறிய கொட்டில் ஒன்றில் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் இருப்பதை அவதானித்த பொலிஸார், சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபரிடம் எந்தவித ஆவணங்களும் இல்லாதமையால் அடையாளம் காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதிகளைச் சேர்நத கிராம சேவகர்களை அழைத்து சடலத்தை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கொட்டகலையில் கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளை!

கொழும்பு, ஓக 21

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை வூட்டன் நகரில் அமைந்துள்ள சில்லறை கடை மற்றும் சமையல் எரிவாயு நிரப்பும் நிலையம் ஆகியவற்றில் நேற்று அதிகாலை இனந்தெரியாதவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தின்போது சில்லறைக் கடையில் சிகரெட், உட்பட காசு என மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், சமையல் எரிவாயு நிரப்பும் நிலையத்தில் 70000 ரூபா பணமும் திருடனால் திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருடன் கடைகளில் முன்புறத்தில் உள்ள இரும்புக் கதவு போன்றன உடைத்து முன் வழியாகக் கடைக்குள் நுழைந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக நுவரெலியா கைரேகை அடையாளப்பிரிவு, நுவரெலியா மோப்ப நாய் பிரிவு உட்பட விசேட பொலிஸ் குழுக்கள் இத்திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# நாடாளுமன்றத்துக்கு படகு மூலம் வந்த எம்.பி

கொழும்பு, ஓக 21

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று நடைபெற்றது. இதற்கு புதிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் படகு வழியாக நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார்.


கோட்டை மாநகரசபையின் முன்னாள் மேயர் மதுர விதானகே, நேற்று தியவன்ன ஏரியை படகில் கடந்து நாடாளுமன்றத்துக்கு வந்தார்.

கொழும்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பொதுமக்களை ஏரிப்பயணத்தில் கவனம் செலுத்த ஊக்குவிக்கவே இந்த முயற்சியை மேற்கொண்டார் என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் முயற்சியினால் தியவன்ன ஏரி புனரமைக்கப்பட்டதால் படகுப்பயணம் சுலபமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டும்

## சித்தார்த்தன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஓக.21

**எதிர்க்கட்சி சிறியதாக இருந்தாலும் மக்களின் ஜனநாயக ஆணைக்கு மதிப்பளித்து, புதிய அரசமைப்பின் மூலம் தமிழ் மக்களின அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படுவதை சபாநாயகர் உறுதி செய்யவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் தலைவர் த.சித்தார்த்தன் நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.**

புதிய சபாநாயகரை வாழ்த்தி உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சிகள் சிறிதாக இருந்தாலும், ஜனநாயக முறைப்படி மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்கப்படவேண்டும். இதனைச் சபாநாயகர் உறுதி செய்யவேண்டும்.

அரசு புதிய அரசமைப்பை உருவாக்கும்போது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். 70 வருடமாக தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளுக்காக போராடி வருகிறார்கள். அவர்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படுவதை, இந்தச் சபையை தலைமை தாங்கும் சபாநாயகர் உறுதிசெய்யவேண்டும்- என்றார்.

# மக்களுக்கு சேவையாற்ற சந்தர்ப்பத்தை தாருங்கள்

## சபாநாயகரிடம் பிள்ளையான் வேண்டுகோள்

கொழும்பு, ஓக 21

மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தருமாறு புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துறை சந்திரகாந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் பங்கேற்பதற்கு மட்டக்களப்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியதை அடுத்து பிள்ளையான் நேற்றுமுன்தினம் பலத்த பாதுகாப்பு புக்கு மத்தியில் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து



கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார்.

இதனையடுத்து, நேற்று நடைபெற்ற 9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் பங்கேற்ற பிள்ளையான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பாக புதிய சபாநாயகராகப் பொறுப்பேற்ற மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மேலும் தான் 5 வருடங்கள் சிறைவாசம் அனுபவிப்பதாக தெரிவித்த அவர், மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தருமாறு புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்தார்.

தான் சிறையில் உள்ளமையால் நாடாளுமன்றத்துக்கு வரவேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். இதனால் மக்களுக்கு சேவை செய்ய முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# சபை முதல்வராக தினேஷ்

கொழும்பு, ஓக 21

09ஆவது நாடாளுமன்றத்தின் சபை முதல்வராக அமைச்சர் தினேஷ் குணவர்தன கடமையைப் பொறுப்பேற்றார்.

இதேவேளை, ஆளும் கட்சியின் பிரதாம கொரடாவாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடமையைப் பொறுப்பேற்றார்.

# பொதுமன்னிப்பு கைதிகள் பட்டியல் கோட்டாபயவிடம்

கொழும்பு, ஓக 21

பொது மன்னிப்பு வழங்குவதற்கு தகுதியுடைய 902 பேரின் பெயர்ப் பட்டியல் அனுமதிக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சிறு குற்றங்களை இழைத்தோருக்கே ஜனாதிபதியின் அனுமதியுடன் பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

கைதிகள் மற்றும் அவர்களின் விடுதலை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக அண்மையில் ஜனாதிபதியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்தல் மற்றும் சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடியை குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ தலைமையில் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்துகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக 21

யாழ் மாவட்டத்தில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து காணப்படுகின்றது. வேகத்தை குறைத்து விவேகமாக செயற்படுவதன் மூலமே விபத்துக்களைக் குறைக்க முடியும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி. யமுனாநந்தா தெரிவித்தார்,

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்து காணப்படுகின்றன.

கொரோனா தாக்கத்தின் பின் போக்குவரத்து முடக்கங்கள் காணப்பட்டதன் காரணமாக விபத்துக்கள் குறைந்து காணப்பட்டன. இலங்கையிலேயே வீதி விபத்துகளால் இறப்பு ஏற்படும் அபாயம் இல்லை என்ற நிலை இருந்தது.

ஆனால் 6 ஆம் மாதத்துக்குப் பின்னர் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த மாதம் மட்டும் யாழ். போதனா வைத்தியசாலையில் சுமார் 180 பேர் வீதி விபத்துக்களால் காயப்பட்டுச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சிலர் இறந்துள்ளார்கள். பலர் வீதி விபத்துக்கள் இடம்பெற்ற ஸ்தலத்திலேயே இறந்துள்ளார்கள்.

இந்நிலையிலே வீதி விபத்துக்கள் எவ்வாறு ஏற்படுகின்றன. அவற்றை எவ்வாறு தவிர்ப்பது என்பது பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும்.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விபத்துப் பிரிவை எடுத்துக்கொண்டால் அங்கு 70 சதவீதமானவர்கள் வீதி விபத்துக்களால் காயமடைந்து நிரந்தர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

நகரப்பகுதிகளில் கனரக வாகனங்கள் பயணிக்கின்ற தன்மை தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் பாடசாலை வீதிகளில் நெரிசல் காணப்படுகின்றபோதிலும் விரைவாக வேலைக்கு செல்ல வேண்டும், பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் வேகமாகச் செல்லும்போதும் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே வேகத்தை குறைத்து விவேகமாக பயணிப்பதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும்-என்றார்.

# ஷானி அபேசேகரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக 21

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகரவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேநேரம், உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன மெண்டிஸையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த இருவரையும் நேற்று வியாழக்கிழமை கம்பஹா நீதிவான் நீதிமன்றம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய அவர்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

# நாடாளுமன்றில் ஜனநாயகம் பாதுகாக்கப்படல் வேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை



கொழும்பு, ஓக 21

ஜனநாயக ரீதியில் பதிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

9ஆவது நாடாளுமன்ற அமர்வில் நேற்று வியாழக் கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேர்வர்தனவுக்கு வாழ்த்து தெரிவித்து தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "மாத்தறை ராகுல வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற நீங்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டத்தைப் பெற்றுள்ளீர்கள். இதேபோன்று நாடாளுமன்ற செயற்பாடுகளிலும் உங்களுக்கு அதிக அனுபவமும் உண்டு.

உங்களது தலைமையில் நாடாளுமன்றச் செயற்பாடுகள் பக்கசாற்பற்ற முறையில் முன்னெடுக்கப்படும்- என்றார்.

# காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் அலுவலகப் பெயர்ப்பலகை உடைப்பு!

## அம்பாறையில் விசமிகள் அட்டகாசம்

அம்பாறை, ஓக 21

**அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் சங்கக் காரியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகை இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதில் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.**

**இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தலைவி செல்வராணி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தம்பிலுவில் மத்திய சந்தைக் கட்டடத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கக் காரியாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப்பலகையே இனந்தெரியாதவர்களால் அடித்து உடைத்துச் சேதமாக் கப்பட்டுள்ளது.

'இதே போலத்தான் உனக்கும் செய்வோம் கருணா நலன் விரும்பிகள்' என அங்குபோடப் பட்டிருந்த துண்டுப் பிரசுரத்தில் எழுதப்பட்டுள்ளது. இது ஓர் அடாவடித்தனம். நாங்கள் எவருக்கும் எதுவும் செய்யவில்லை. யாருடனும் எதுவித பிரச்னைக்கும் செல்லவில்லை

எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை நிலை தெரியவேண்டும். அதற்காகத் தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தை வைத்து போராடி வருகின் றோம்.

இதனைச் செய்தவர்கள் யார்




என எங்களுக்குத் தெரியாது. இதனைச் செய்தவர்கள் யார் என விரைவில் கண்டுபிடிப்போம். இது தொடர்பாக ஐ.நா. சபைக்கும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணைக்குழு, திருக்கோவில் பொலிஸ் அதிகாரிகளுக்கு இது தொடர்பாக அறிவித்திருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இந்த மாதம் 30 ஆம் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் போராட்டம் நடத்தவிருக்கும் தறுவாயில் இந்த வேலையை ஏன் செய்தார்கள் எனத் தெரியவில்லை. இதனை யார் செய்தாலும் எங்களது போராட்டம் தொடரும் - என்றார்.

# தெஹிவளை மிருகக்காட்சிசாலை இடமாற்றும் திட்டம் சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஓக 21

தெஹிவளை மிருகக்காட்சி சாலையை பிலியந்தலையி லுள்ள கலபோல பகுதிக்கு மாற்றுவதற்கான திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

விலங்குகளைக் கூண்டு களில் பராமரிக்கும் மிருகக் காட்சிசாலையின் தற்போதைய முறை மாற்றப்பட வேண்டும். விலங்குகளைக் கொடுமைக்கு உட்படுத்தவோ அல்லது வழிநடத்தவோகூடாது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

விலங்கு பராமரிப்பதற்காக தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மாதாந்தம் 4 கோடி ரூபா செலவாகிறது. அதே நேரத்தில் ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பன வாக 60 இலட்சம் செலவிடு கிறது.

அத்துடன் யானைகளைப் பயிற்சியளித்தல், ஊர்வலங் களில் பயன்படுத்துவது தொடர்பான வழிகாட்டல் வரைவு விரைவில் அமைச்சர வையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் ரணதுங்க தெரிவித்தார்.

# கோட்டாவின் கொள்கை விளக்கம் பாராளுமன்றத்தில் இன்று விவாதம்

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் இன்று விவாதம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தி லேயே இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

எனினும், எதிரணி உறுப் பினர்களுக்கு விவாதத்தில் உரையாற்றுவதற்கு 40 வீத நேர ஒதுக்கீடே வழங்கப் பட்டுள்ளது எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று மாலை பாராளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையாற்றினார்.

# சேதனப் பசளை பயன்பாட்டை அதிகரிக்க வேலைத் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக 21

சேதனப் பசளையின் பயன்பாட்டை யாழ். மாவட் டத்தில் அதிகரிப்புக்குரிய வேலைத்திட்டங்கள் எதிர் காலத்தில் முன்னெடுக்கப்பட வுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்

யாழ்.மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தக் கூட்டத்தில் விவசாயிகளின் பாதிப்பு கள் தொடர்பில் விவசாய சம்மேளனத்தினர் தமது கருத்துக்களை முன்வைத் தார்கள்.

உரப் பாவனை, அதன் தாக்கம் தொடர்பில் இன் றைய கூட்டத்தில் ஆராய்ந் திருந்தோம். சேதனப் பசளை யினுடைய பயன்பாடு மிகவும் குறைவாக இருப்பதாகவும் அசேதனப் பசளையின் பயன் பாடு மிகவும் அதிகமாக காணப் படுகின்றது என கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆகவே இந்த சேதனப் பசளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் வேலணை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளில் உருவாக் கப்பட்டுள்ளன. அவற்றின் செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தோம். வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள சேதனப் பசளை தயாரிக்கும் இடம் செயற்பாடு இல்லாத நிலை காணப்படுவதாகச் சுட்டிகாட்டப்பட்டது.

இனிவரும் காலங்களில் வேலணை பிரதேச பிரிவில் உள்ள சேதனப் பசளை உற்பத்தி நிலையத்தைச் சரியாக செயற்படுத்தக்கூடிய ஏற்பாடுகள் தொடர்பில்



புதிய தரப்பினருடன் கலந்துரையாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது

அசேதனப் பசளை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக பிரஸ்தாபிக்கப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் மூலம் இதனைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு சரியான விலையை உறுதிப்படுத்தி விற்பனை செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதாகவும் கூட்டத்தில் தீர்மானித்தோம்- என்றார்.

# வெளிநாடுகளில் இருந்து 745 பேர் நாடு திரும்பினர்

குவைத், ஐக்கிய அரபு எமி ரேட்ஸ், கட்டார் மற்றும் இந் தியா ஆகிய நாடுகளிலிருந்து மொத்தமாக 745 இலங்கை யர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

அதன்படி கட்டார், டோஹாவிலிருந்து கட்டார் ஏயர்வேஸ் விமான சேவைக்கு சொந்தமான கி.யூ.-668 என்ற விமானத்தின் மூலம் 20 இலங்கையர்கள் அதிகாலை 1.31 மணியளவில் கட்டு நாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தியாவின், சென்னையி லிருந்து இலங்கை ஏயர்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான யு.எல் -1126 என்ற விமானத்தில் 290 இலங்கையர்கள் அதிகாலை 5.08 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

குவைத்திலிருந்து இலங்கை ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல் -230 என்ற விமானத்தில் 266 இலங்கையர்கள் அதிகாலை 4.22 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலி ருந்து இலங்கை ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல் -226 என்ற விமானத்தில் 169 இலங்கையர்கள் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்த டைந்த அனைவரின் பி.சி. ஆர்.சோதனை முன்னெடுக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.08.2020 அன்று வெளியிடப்பட்டது.